**மன்றப் பொருள்**

2021ம் ஆண்டு செப்டம்பர் 30.09.2021–ம் தேதி வியாழன் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு. ஜெ.இரவி,**
**தனி அலுவலர்**

1. ஆணையர் (பொ) அவர்களின் செப்டம்பர் 2021ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

2. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள 11.12.2020 அன்று அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020–21 க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ரூ.கோடியில்)**

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | சிறப்பு சாலைகள் திட்ட (SRP) மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| பண்ணுருட்டி | 4.50 | 4.05 | 0.45 |

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டில் 3 சிப்பம் சாலைப்பணிகள் ரூ.450.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 3 சிப்பம் சாலைப்பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி 12.01.2021 அன்று பெறப்பட்டு மன்றத் தீர்மான எண். 615 நாள் 11.12.2020ல் அனுமதி பெறப்பட்டு வேலை உத்திரவு 25.02.2021ல் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் 01.09.2021 அன்று மேற்கொள்ளப்பட்ட காணொளி கூட்டத்தில் நகராட்சிகளின் நிதி சுமையை குறைக்கும் நோக்கத்தில், சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவக்கப்படாத பணிகளை இத்திட்டத்திலிருந்து ரத்து செய்து, அடுத்து வரும் சாலை மேம்பாட்டு திட்ட பணிகளில் சேர்த்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சிறப்பு சாலைகள் திட்டப்பணிகளில் கீழ்கண்ட சிப்பங்களில் உள்ள 10 எண்ணிக்கையிலான சாலைப்பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது.

| வ.எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **சிப்பம் – I**<br>பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 பகுதிக்குட்பட்ட போலீஸ் லைன் 3வது குறுக்கு தெரு, போலீஸ் லைன் 4வது தெரு மற்றும் குறுக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணி – 9 பணிகள். | 40.35 |
| 2 | **சிப்பம் – II**<br>பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 பகுதிக்குட்பட்ட பாரதமாதா தெருவில் தார்சாலை அமைக்கும் பணி – 1 பணி. | 8.80 |
| | **மொத்தம்** | **49.15** |

எனவே, சிறப்பு சாலைகள் திட்டத்தில் துவங்கப்படாமல் உள்ள மேற்கண்ட 2 சிப்பங்களில் உள்ள சாலைப் பணிகளின் மதிப்பீட்டுத் தொகை ரூ.49.15 இலட்சத்தை சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21ல் நகராட்சி நிதி பங்களிப்பு தொகையிலிருந்து ரூ.45.00 இலட்சம் மற்றும் மீதமுள்ள தொகையான ரூ.4.15 இலட்சத்தை சிறப்பு சாலைகள் திட்ட (SRP) மானிய நிதி தொகையிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

3. பண்ணுருட்டி நகராட்சி மொத்தம் 18.03 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட முதல்நிலை நகராட்சியாகும் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 14,170 குடும்பங்களும் அக்குடும்பங்களின் மொத்தம் 60323 மக்கள் வசித்து வருகின்றனர். அதனையடுத்து தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மூலம் நகரில் மொத்தம் உள்ள வீடுகளையும் வணிக நிறுவனங்களையும் கணக்கெடுப்பு செய்ததில் 16,640 குடும்பங்களும் மக்கள் தொகை 63180 எனவும் வணிக நிறுவனங்கள் 3361 எனவும் கணக்கெடுப்பு செய்துள்ளனர். மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான திருவதிகையில் மிகவும் பிரசித்தி பெற்ற வீரட்டானேஸ்வரர் ஆலயமும் சரநாராயண பெருமாள் ஆலயமும் அமையப்பெற்றுள்ளமையால் ஆயிரக்கணக்கான மக்கள் வருகை புரிகின்றனர்.

பண்ணுருட்டி நகரம் அருகே நெல்லிக்குப்பம் நுஜனு பாரி சக்கரை ஆலையும், லாக்டோ சாக்லேட் கம்பெனியும் அமைந்துள்ளது. மேலும் நகராட்சி பகுதியிலும் நகரை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் முந்திரி சுத்தப்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் அமைந்தள்ளது. அருகே உள்ள கிராமங்களில் பலா மரங்கள் அதிக அளவில் இருப்பதினால் பலாப்பழம் வெளி ஊர்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பி வைத்திட பொதமக்கள் நகரினை நோக்கி வரவேண்டி உள்ளது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான விவசாய பெருமக்களும் பொது மக்களும் பண்ணுருட்டி நகருக்கு வந்து செல்கின்றனர். இதன் காரணமாக வர்த்தகம் நிறைந்த நகரமாக உள்ள நிலையில் பேருந்து நிலையம் தினசரி மார்க்கெட், கடை வீதி கோயில் பிரகாரங்கள் மற்றும் கல்வி பயிலும் நோக்குடன் நகரில் கிராமப்புறங்களிலிரு.து குடியேறிய குடும்பங்கள் வாயிலாக திடக்கழிவுகள் அதிக அளவில் சேகரமாகின்றன.

1998ம் அண்ட அளவுகோலின்படி பொது சுகாதாரம் தூய்மை பணிக்காக 139 பணியாளர்கள் அமர்த்தப்பட்டு தூய்மைபணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பார்வை 5ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 97 பணியாளர்கள் நியமித்து தூய்மபணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி மூன்றாண்டுகளுக்கு வழங்கியதன் காரணமாக21.02.2022, 97 தூய்மை பணியாளர்கள் தனியார் மூலம் ஒப்பத் முறையில் நியமித்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களின் அனுமதி 21.02.2022 தேதியுடன் முடிவடைகிறது. எனவே பார்வை 6ல் காணும் ஒப்பந்ததாரரின் கடிதத்தின் படி ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன்கருதியும் தற்பொழுது கொரெனோ காலமாக உள்ளதாலும் தற்காலிகமாக மகளிர் சுய உதவிக்குழு மூலம் இப்பணி செய்யப்பட்டு வருகிறது. எனவே புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கு பின்னேற்பிற்கும்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை ( நிலை) எண்.101 நாள்30.04.1997 ன் படி பண்ணுருட்டி நகராட்சி பொது சுகாதாரம் தூய்மை பணி மேற்கொள்ள கீழ்கண்ட அளவுகோலின்படி பணியாளர்கள் தேவைப்படுகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கிய செயல்முறை உத்தரவு ந.க.எண். 25580/பி3/2015–12 நாள் 03.09.2015ன் படி 11 முதல் 22 மற்றும் 32, 33 ஆக மொத்தம் 15 வார்டுகள் 22.02.2019 முதல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் ந.க.எண். 32976/ஜெ3/2018 நாள்.11.12.2018ல் கண்டுள்ளபடி தூய்மை பணி 97 நபர்களை கொண்ட மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எண் | வேலை விவரம் | கணக்கீடு | அளவுகோலின்படி தேவை |
|---|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் வீதம் 16,640 குடியிருப்புகளுக்கு | 16640/250x2 | 134 |
| 2 | டாடா ஏஸ் வாகனம் | 5x3 | 15 |
| 3 | லாரிகள் 2 சூடிஎ ( 4 பேர் வீதம்) | 2x4 | 8 |
| 4 | கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்திட | 79.63கி.மீ | 80 |
| 5 | பேருந்து நிலையம் | 2x2 | 4 |
| 6 | தினசரி மார்கெட் | 1x2 | 2 |
| 7 | இலவச கழிப்பறை | 1x2 | 2 |
| 8 | MCC மணி நகர் எல் ஆர். பாளையம் | 1x3 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 9 | MCC நேதாஜி நகர் மேலப்பாளையம் | 1x3 | 3 |
| 10 | OCC முத்தியா நகர் தட்டாஞ்சாவடி | 1x1 | 1 |
| 11 | OCC காமராஜர் நகர் | 1x1 | 1 |
| 12 | OCC அ.ப.சிவரான் நகர் | 1x1 | 1 |
| 13 | OCC ஹவுசிங் போர்டு குடியிருப்பு | 1x1 | 1 |
| 14 | RRC சத்தியமூர்த்தி தெரு | 1x1 | 1 |
| 15 | RRC பஞ்சவர்ணம் நகர் | 1x1 | 1 |
| | தேவைப்படும் மொத்த பணியாளர்கள் | | 256 |

| | | |
|---|---|---|
| 1 | அரசு ஆணை எண்.101ன் விதிமறைகளின்படி தேவைப்படும் தூய்மை பணியாளா் எண்ணிக்கை | 257 |
| 2 | அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் | 139 |
| 3 | தற்போது பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் | 100 |
| 4 | தூய்மை பணியாளர்கள் பற்றாக்குறை | 39 |
| 5 | சுய உதவிக்குழுக்கள் / தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக பணி மேற்கொள்ள தேவைப்படும் பணியாட்கள் | 157 |

நகராட்சி பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளுதல் மதிப்பீட்டு தொகை கணக்கிடுதல்

நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் தூய்மை பணியாளர்களை நியமித்து தூய்மை பணியினை மேற்கொண்டால் மேற்படி 157 பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் இதர படிகள் விவரம் கீழ்கண்டவாறு ஒரு பணியாளருக்கு 1 மாதத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம்

| | | |
|---|---|---|
| அடிப்படை ஊதியம் | : | 15700.00 |
| அகவிலைப்படி | : | 1099.00 |
| வீட்டு வாடகைப்படி | : | 700.00 |
| மருத்துவபடி | : | 300.00 |
| சலவைப்படி | : | 200.00 |
| ஓய்வூதிய பங்களிப்பு தொகை | : | 1680.00 |
| மொத்தம் | | 19679.00 |

157 நபர்களுக்கு ஒரு மாதத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம் 157 x 19679 = ரூ. 30,89,603.00

| | |
|---|---|
| (அ) 157 நபர்களுக்கு 12 மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் | 3,70,75,236.00 |
| ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை (15700+1099+70) / 2 | 8750.00 |
| (ஆ) 157 நபர்களுக்கு ஓராண்டிற்கு ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தொகை | 13,73,750.00 |
| (இ) சீருடை மற்றும் தையற்கூலி நபர் 1க்கு 2000 வீதம் | 3, 14,000.00 |
| (ஈ) காலணி (1 நபருக்கு ரூ.350/– | 54,950,00 |
| பாதுகாப்பு உபகரணங்கள் 1 நபருக்கு ரூ. 3465/– | 544,005.00 |

12 மாதங்களுக்கு ஆகும் மொத்த சிலவினம் ரூ. 39370691.00

சுய உதவிக்குழு அல்லது ஒப்பந்த அடிப்படையில் வாயிலாக மனித சக்தியை பெற்று (Man Power) தூய்மைபணி மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை கணக்கிடுதல்(out sourcing of man power from SHG/Contract Basis)

| | | |
|---|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் | - | 157 |
| மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதம் (market rate) 2020-21 | - | ரூ. 420.00 |
| 1 நபருக்கு 26 நாட்களுக்கு வழங்க வேண்டிய தொகை | - | ரூ. 10920.00 |
| 157 நபர்களுக்கு வழங்க வேண்டிய மாத சம்பளம் | - | ரூ. 1714440.00 |

| | | |
|---|---|---|
| ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு (ESI 4.75%) | 81436 x 12 | 977232.00 |
| EPF 13.16% | 225609 x 12 | 2707308.00 |
| Administrative Charges 10% | 171444 x 12 | 2057328.00 |
| LIC | | 78500.00 |
| Safety Equipments (Per head Rs.3500/- per annum) | | 549500.00 |
| Uniform (Rs. 2000 Per Head) | | 314000.00 |
| **Total** | | **6683868.00** |

| | |
|---|---|
| 12 மாதங்களுக்கு சம்பளம் | ரூ. 1714440.00 +<br>ரூ. 6683868.00 |
| | **ரூ. 8398308.00** |

| நோக்குப்பட்டியல் | |
|---|---|
| 157 தூய்மை பணியாளர்களை நகராட்சி வாயிலாக ஊதிய ஏற்ற முறையில் (நிரந்தர பணியாளராக) பணி நியமனம் செய்யப்பட்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச சிலவுத் தொகை | 3,93,70,691.00 |
| மேற்கண்ட பணியினை சுய உதவிக்குழுக்கள்/தனியார் ஒப்பந்தத்தின் வாயிலாக மேற்கொண்டால் 1 வருடத்திற்கு ஆகும் உத்தேச சிலவுத் தொகை | 8398308.00 |
| **வித்தியாசம்** | **30972383.00** |

எனவே, அட்டவணையில் கண்டுள்ள 157 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ஊதியத்துடன் இதர பயன்களையும், சேர்த்து சுய உதவிக்குழுக்கள் அல்லது தனியார் ஒப்பந்த அடிப்படையில் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள ஊதியத்தின்படி நியமித்துக் கொள்ளவும், அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் நியமிக்கும் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதத்தில் அவ்ஊதியத்தினை உயர்த்தி கொள்ளவும் மற்றும் இதர பிடித்தங்களை உயர்த்தி வழங்க வேண்டப்பட்டுள்ள கருத்துருவின் மீது அனுமதி மற்றும் உத்திரவு வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் வழிமுறையாக நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்க ஆணையாளர் அவர்களின் ஒப்புதலுக்கு

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை–28 அவர்களின் நிர்வாக அனுமதி பெற்றவுடன் மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 2318/2021/எச்1

4. பண்ணுருட்டி நகராட்சியில் எல்லைக்குள் இருக்கும் நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள ரத்தினம் பிள்ளை நாளங்காடி அமைந்துள்ள இடம் திருவாளர்கள் சி.டி.சபாபதி டிரஸ்டிக்கு பாத்தியப்பட்ட இடமாகும்.

மேற்கண்ட இட உரிமையாளர்கள் பல ஆண்டுகளுக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வாடகை பெற்று வந்துள்ளனர். மேற்கண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் கடைசியாக 20.08.2014ல் பதிவு செய்யப்படாமல் ஒப்பந்தம் மூலம் நகராட்சி ஆணையாளருக்கு 1. திரு.ஆர்.சி.பழனிவேல் செட்டியார் 2. திரு.சி.டி.சபாபதி செட்டியார் 3. திரு.சி.டி.சீனுவாசன் ஆகிய மூவரும் சேர்ந்து நகராட்சி ஆணையருக்கு 01.04.2014 முதல் 31.03.2027 வரை மாதம் ஒன்றுக்கு வாடகை .12500/– ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கு ஒருமுறை அப்போதைய மாத வாடகை தொகையில் 10 சதவீதம் உயர்த்தியும் மாதாந்திர வாடகை தொகை கொடுத்து வந்த 15 வருட கெடு முடிவில் வேறு வாடகை பத்திரத்தின் மூலம் புதுப்பித்து கொள்ள வேண்டியது என போடப்பட்டுள்ளது.

அதன்படி மாதாந்திர வாடகை ரூ.13750/– வீதம் 01.04.2021 முதல் 31.03.2022 வரை முடிய 12 மாத காலத்திற்கு (13750 x 12= 165000) (ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபத்து ஐந்தாயிரம் மட்டில்) மேற்கண்ட நபருக்கு குத்தகை தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மேற்கண்ட ஒப்பந்தத்தின் படி .165000/– வருவாய் நிதியிலுந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

கோப்பு எண் 3096/2008/A4

5. பண்ணுருட்டி நகராட்சி அம்மா உணவகத்தில் ஏப்ரல் , மே 2021ம் மாதம் தினசரி (கொரோனோ இரண்டாம் அலை ) பொதுமக்கள் பயன்படும் நிலையில் மூன்று வேலையும் சாப்பிட தேவையான கவர், பிளேட் மற்றும் கப் ஆகியவை வாங்குவதற்கு பொது நிதியிலிருந்து செலவு செய்திட தோராய செலவினமாக ரூ.100000/—யை செலவு செய்ய மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். /2021/பி1

6. பண்ணுருட்டி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சியில் பணிபுரியும் தகுதியான தூய்மை பணியாளர்கள் (ஆண், பெண்), துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள், அலுவலக உதவியாளர்கள், செயின்மேன், மகப்பேறு ஆயா மற்றும் இதர பணியாளர்களுக்கு 2021—2022—ம் ஆண்டிற்கான சீருடைகளை தீபாவளி பண்டிகைக்கு முன்னரே வழங்கிடவும், சீருடைகளை கடந்த ஆண்டுகளை போல இவ்வாண்டும் அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான கடலூர் 'காதி கிராப்ட்' நிறுவனத்தில் வாங்குவதற்கும், அதற்கான தையற்கூலி வழங்குவதற்கும் அனுமதி கோருவதுடன் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.50 லட்சம் (மூன்றரை லட்சம்) மன்றத்தின் அனுமதியும் ஆணையரின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ. எண். 1212 / 2021 / எச்1**

7. பண்ணுருட்டி நகராட்சியில் சொத்து வரி குடிநீர் வரி மற்றும் வரியில்லா இனங்கள் செலுத்துவதற்கு UTIS Connectivity—க்கான UPN Connection (வசூல் மையம் BSNL இணைப்பிற்கு) 01.04.2020 முதல் 31.12.2020 வரை ரூ.1,89,649/— 9 மாத காலத்திற்கான மேற்கண்ட தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.4209/2011/எப்.1</u>**

**8.** பண்ணுருட்டி நகராட்சியில் காசாளர் அறையில் உள்ள ரசிது பிரிண்ட் போடும் பிரிண்டர் பழுதடைந்து பிரிண்ட் சரியாக தெரியவில்லை என்பதால் அதனை மாற்றிவிட்டு புதியதாக MSP 250 STAR Printer —1 எண்ணிக்கையில் வாங்குவதற்கும் ஏற்கனவே பழுதடைந்த இரண்டு ரசீது Print போடும் பிரண்டரையும் பழுது நீக்கம் செய்வதற்கும் ஆகும் தோராய செலவீனம் ரூ, 30,000/— (முப்பதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி செலவீனத்திற்கும் பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

9. இந்நகராட்சியில் உள்ள L6170 பிரிண்டர் மற்றும் M1005 பிரிண்டர் இரண்டிற்கும் தேவையான ink மற்றும் Tonner Cartridge புதியதாக வாங்குவதற்கு 13.04.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மொத்த தொகை |
|---|---|---|
| 1 | டெக்னோ சொலுஷன் | 1,01400.00 |
| 2 | எய்ம்ஸ் நெட்கபே | 98,000.00 |
| 3 | GRIC அஸோசியேட்ஸ் | 1,02250.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் வரிசை எண். 2 குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள எய்ம்ஸ் நெட்கபே நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

10. மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் செயல் முறை கடிதம் ந.க.எண். அ1/17816 நாள். 18.09.2021 –ல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு 02.10.2021 அன்று 2500 மரக்கன்றுகளை வாங்கி நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அதன் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | பெயர் | மரக்கன்றுகள் விவரம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1 | இனியன் நர்சரி கார்டன் வேகாக்கொல்லை, பண்ணுருட்டி | மகா கன்னி | 70 x 300 | **21000.00** |
| | | தூங்குமூஞ்சிமரம் | 60 x350 | **21000.00** |
| | | சொர்க்கம் | 65 x260 | **16900.00** |
| | | சில்வர் உட் | 65x 180 | **11700.00** |
| | | வெங்கம் | 80x120 | **9600.00** |
| | | பாதம் | 80x100 | **8000.00** |
| | | **மொத்தம்** | | **88200/–** |
| 2 | **வி.சுரேஷ்பாபு** பகவதி அம்மன் கோயில் தெரு, கடலூர் | மகா கன்னி | 65 x300 | **19500.00** |
| | | தூங்குமூஞ்சிமரம் | 55x350 | **19250.00** |
| | | சொர்க்கம் | 60 x260 | **15600.00** |
| | | சில்வர் உட் | 60 x180 | **10800.00** |
| | | வெங்கம் | 70 x120 | **8400.00** |
| | | பாதம் | 70 x100 | **7000.00** |
| | | **மொத்தம்** | | **80550/–** |
| 3 | சுவேதா நர்சரி கார்டன் குள்ளஞ்சாவடி ரோடு வேகாக்கொல்லை பண்ணுருட்டி | தூங்குமூஞ்சிமரம் | 65x300 | **19500.00** |
| | | சொர்க்கம் | 70x350 | **24500.00** |
| | | மகா கன்னி | 90x260 | **23400.00** |
| | | சில்வர் உட் | 70x180 | **12600.00** |
| | | வெங்கம் | 75x120 | **9000.00** |
| | | பாதம் | 75x100 | **7500.00** |
| | | மொத்தம் | | **96500/–** |

மேற்கண்ட மூன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்டுள்ளவாறு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வி.சுரேஷ்பாபு அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ. எண்.2051/2021/சி1**

இடம்– பண்ணுருட்டி
நாள்– 30.09.2021

தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ)
பண்ணுருட்டி நகராட்சி.